DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | SC Case No. 42/2017 |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW – 26** மகாலட்சுமி |
| Father's Name | Annamalai |
| Village | Kadalaiputhur |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 06.01.2023

முதல் விசாரணை

**I.** நான் கடலிபுதூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சக்திவேல் எனது தந்தை ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். 10.06.2016 ம் தேதி மாலை 5 மணிக்கு குப்பன், முருகன் ஆகியோர் முன்னாடி வந்தார்கள். பின்னர் கஸ்தூரி, மலர்விழி, ஞானபிரகாஷ் ஆகியோர் என் தந்தை வீட்டிற்கு வந்தார்கள். எதிரிகள் அனைவரும் வந்து என் தாத்தா ராமனிடம் நிலம் சம்பந்தமாக பிரச்சனை செய்தார்கள். எதிரிகள் அனைவரும் என் தாத்தாவை அசிங்கமாக பேசி வெட்டி விட்டார்கள். என் தங்கைகள் மாரியம்மாள், சக்திவேல், சங்கரி, கலைமணி, குணசுந்தரி , ஆகியோரையும் எதிரிகள் வெட்டிவிட்டார்கள். சம்பவத்தை பற்றி நான் கடலிபுத்தூரில் என் வீட்டில் இருந்த போது என் தங்கை கலைமணி என்பவர் எனக் கு போன் மூலம் தகவல் சொன்னார். நான் என் தந்தை வீட்டிற்கு வந்து பார்த்த போது அனைவரும் காயம் பட்டு இருந்தார்கள்.

II. சேகர், காண்டீபன், கோகுலகிருஷ்ணன் ஆகியோர் காயம் பட்டவர்களை செஞ்சி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். நான் என் தந்தையிடமும், தங்கைகளிடமும் , சம்பவத்தை பற்றி விசாரித்து தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்று ஞாபகம் இல்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**I.** நான் நீதிமன்றத்தில் சொன்ன விவரங்களை தான் காவல் நிலையத்திலும் சொன்னேன். அ.சா.1 சக்திவேல் என் தந்தை ஆவார். ஆஜர் 1ம் எதிரி குப்பன் எனது பெரியப்பா ஆவார். சம்பவ தேதிக்கு முன்பே என்னை கடலிபுதூரில் திருமணம் செய்து கொடுத்துவிட்டார்கள். சம்பவத்தை பற்றி நான் நேரடியாக பார்க்கவில்லை. போன் மூலம் தகவல் சொன்னார்கள். என் தந்தையின் நெகனூர்புதூருக்கும், எங்கள் ஊர் கடலிபுதூருக்கும் நேரடியாக பேருந்து வசதி கிடையாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பும் பின்பும் நான் கடலிபுதூர் கிராமத்தில் தான் வசித்து வருகிறேன். நான் என் தந்தை வீட்டிற்கு சென்று பார்த்த போது காயம்பட்டவர்களை ஆம்புலன்சில் ஏற்றி கொண்டிருந்தார்கள். நான் நெகனூர் சென்றதாகவும்,காயம் பட்டவர்களை ஆம்புலன்சில் ஏற்றியதை பார்த்ததாகவும் சொல்லுவது பொய் என்றால் சரியல்ல.

II. என் தந்தை வீட்டிற்கு சென்ற பின்பு செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். சம்பவம் குறித்து என் தங்கை எனக்கு போன் மூலம் சொன்னதாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்றைய தினமே போலிசார் என்னை வீட்டில் வைத்து விசாரித்தார்கள். அதன் பின்பு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என் தந்தைக்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல..